வேலை தேடல்

நீங்கள் குறைந்த ஊதியம் பெறுகிறீர்கள் என்று நினைத்தால் MWC ஐ தொடர்பு கொள்ளவும்

54 Victoria St,
Melbourne, VIC 3053

mwc@vthc.org.au

03 9659 3516

/mwcvic

@mwcvic

@mwcvic

MIGRANT WORKERS CENTRE

migrantworkers.org.au

வரி கோப்பு எண்

அவுஸ்திரேலிய வரியிறுப்பு அலுவகத்தின் வலைத்தளம் மூலம் "வரி கோப்பு இலக்கம் (Tax File Number (TFN)) ஒன்றிற்காக விண்ணப்பியுங்கள். நீங்கள் வேலை செய்ய ஆரம்பிக்கும்போது உங்களுடைய வரிக் கோப்பு இலக்கத்தினை நீங்கள் உங்களுடைய முதலாளிக்கு அறிவித்தாக வேண்டும் என்பது முக்கியம். தபால் மூலம் உங்களுடைய வரிக் கோப்பு இலக்கம் வந்து சேர ஏறத்தாழ 2 வாரங்கள் ஆகும்.

விசாவில் உள்ள உங்கள் வேலை நிபந்தனைகள்

உங்கள் விசாவிலுள்ள வேலை நிபந்தனைகள் மற்றும் ஒரு தொழிலாளி என்ற வகையில் உங்களுக்குள்ள உரிமைகள் ஆகியவற்றைப் பற்றித் தெரிந்துகொள்ளுங்கள். உங்களுடைய விசா வழங்கு அறிவிப்புடன் இணைக்கப்பட்டுள்ள கடிதத்தினை வாசித்துப் பார்த்தால் இது தெரியும்.

தற்குறிப்பு

உங்களுடைய கடந்த கால வேலை மற்றும் படிப்பிற்கு அப்பாற்பட்ட அனுபவங்கள் ஆகியவற்றிப் பற்றி விளக்கமாகச் சொல்லும் 'விபரத்தொகுப்பு' (résumé) ஒன்றைத் தயார் செய்யுங்கள். உங்களுக்கு வேலை தரக்கூடிய முதலாளிக்கு உங்களுடைய 'விபரத்தொகுப்பினைக் கொடுப்பதற்கு முன்பாக அதில் பிழை இருக்கிறதா என்று சோதித்துப் பாருங்கள்.

உங்கள் நிர்ணயிக்கப்பட்ட வேலைநிலை ஒப்பந்தம் (award) என்னவென்று தெரிந்துக்கொள்ளுங்கள்

நீங்கள் செய்யும் வேலைக்கான நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் அல்லது பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் என்ன என்று தெரிந்துகொள்ளுங்கள். சில நிர்ணயிக்கப்பட்ட விடயங்களில் ஊதியங்கள், பாதுகாப்புகள், ஆதாயங்கள் (ஊதியத்தோடு கூடிய வருடாந்த விடுமுறை, மேலதிக வேலை நேரங்கள், மேலதிக நேரத்திற்கான சம்பள வீதங்கள்) மற்றும் நிபந்தனைகள் (வேலைக்கான சீருடைகளை வாங்குதல், ஊதியக் கழிப்புகள்) ஆகியன வெவ்வேறாக இருக்கலாம்.

எப்போதும் எச்சரிக்கையோடு இருங்கள்

நீங்கள் வேலை தேடும் இடங்களில் வேலை செய்யும் நிலைமைகள் எப்படி இருக்கின்றன என்று அவதானமாகப் பாருங்கள். உங்களுக்கான ஊதியத்தைப் பற்றியும் மற்ற ஆதாயங்களைப் பற்றியும் உங்களுக்கு வேலை தரக்கூடியவரிடம் கேளுங்கள். ஏதோ ஒன்று சரியில்லை என்று உங்களுக்குப் பட்டால், அந்த வேலையை ஏற்றுக்கொள்ளாதீர்கள்.